**ஓய்வூதியச் சுற்றறிக்கை இல : 06/2022 (I)**

எனது இல : ஓய்வு/சுற்றறிக்கை/2022
ஓய்வூதியத் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
2023.06.09

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,

**14/2022 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின்படி, தொழில் நிமித்தம் வெளிநாடு செல்லும் அரச அலுவலர்களிடமிருந்து விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புகளை அறவிடுவதற்கான வழிமுறைகள்**

06/2022 ஆம் இலக்க 2022.09.20 ஆம் திகதிய ஓய்வூதிய சுற்றறிக்கையின்பால் தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. 14/2022 மற்றும் 14/2022(II) ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைகளின் படி வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விடுமுறையைப் பெறும் அலுவலர்களின் விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான பங்களிப்புகளை அறவிடுவதில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் 06/2022 ஆம் இலக்க ஓய்வூதியச் சுற்றறிக்கையின் மூலம் வெளியிடப்பட்டுள்ளன. இருப்பினும், இச் சம்பளமில்லாத விடுமுறையைப் பெறும் பல அலுவலர்களால் இந்த நடைமுறை இற்றைவரை சரியாகப் பின்பற்றப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

03. ஓய்வூதியத் திணைக்களத்தின் தகவல் தொழிநுட்ப முறைமையில் முறையான பதிவின்றி கணக்கிற்கு பணம் செலுத்தியதன் காரணமாக ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் மக்கள் வங்கியின் தலைமை அலுவலகக் கிளையின் 204100119026661 எனும் கணக்கு இலக்கத்தில் இருப்பு காணப்பட்டுள்ளது.

04. எனவே, அலுவலர்களை அடையாளம் கண்டு அதற்கேற்ப அவர்களது நிலுவை மற்றும் சம்பளப் படிநிலை போன்றவற்றை சரிபார்ப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் நிர்வாக மற்றும் நிறுவனம் சார் பிரச்சனைகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அலுவலர்களால் தீர்க்கப்பட வேண்டும். அறிமுகப்படுத்தப்பட்ட இந்த முறைப்படியான வழிமுறையின் மீறலுக்கு ஓய்வூதியத் திணைக்களம் பொறுப்பேற்காது.

05. இவ்வாறான சூழ்நிலைகளில் இருந்து மீழ்வதற்காக, மேற்படி சுற்றறிக்கையின்படி தங்களின் அமைச்சின் கீழ் கடமையாற்றுகையில் விடுமுறையைப் பெற்ற உத்தியோகத்தர்களின் விபரங்களை 2023.06.30 ஆம் திகதிக்கு முன்னர் wopcontribution@pensions.gov.lk என்ற மின்னஞ்சல் ஊடாக இணைப்பு 01 இன் படி தயாரிக்கப்பட்ட படிவத்தின் மூலம் ஓய்வூதியத் திணைக்களத்திற்குத் தெரிவிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

06. இது தொடர்பில் தங்களால் வழங்கப்படும் ஒத்துழைப்பு மிகவும் பாராட்டுதற்குரியது.

**ஒப்பம்**

**ஏ. ஜகத் டி. டயஸ்**

ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம்

பிரதி:

1. செயலாளர், பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – த.த.த

• பின்னிணைப்பு 01

| தொ. இல | பெயர் | தே.அ .இல | பதவி | அமைச்சு / திணைக் களம் | விடுமுறை வகை (வெளிநாட்டு / உள்ளூர்) | விடுமுறை ஆரம்ப திகதி | தொடர்பு இலக்கம் | மின்னஞ்சல் முகவரி | பங்களிப்பாளர்களின் வங்கி விவரங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |